# பட்டத்துயானை நாவல் வெளிக்காட்டும் காலனிய ஆதிக்க வாழ்வியல் சிந்தனைகள்

**சி.பகவதி ராஜகுமாரி**

**பதிவு எண்: 21212014022011, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வு மையம்,**

**ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி – 628002.**

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அங்கீகாரம் பெற்றது,அபிஷேகப்பட்டி,**

**திருநெல்வேலி-12, தமிழ்நாடு, இந்தியா.**

**முனைவர்.மு.புஷ்பகவல்லி,**

**நெறியாளர் ☐ உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை ☐ தமிழாய்வு மையம்,**

**ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி – 628002.**

**17**

**ஆய்வுச்சுருக்கம்:**

நவீனகால இலக்கியத்தில் மக்களின் அன்றாட வாழ்வியல் சித்தரிப்புகளைச் சமூகச்சூழலில் பிரதிபலிக்கும் முக்கிய பங்கு வகிக்கும் வகையில்நாவல் சிறந்து விளங்குகின்றன. மேலும் ஐரோப்பிய காலனிய காலம் தொட்டு இன்று வரையுள்ள விடுதலைச்சமூகம் வரை அனைத்து வரலாற்று , வாழ்வியல் சித்தரிப்புகளையும் கல்விஞானத்துடனும் , கேள்விஞானத்துடனும் சமூகத்திற்குக் கருத்துக்களை அளிப்பதில் சிறந்த பங்காற்றியுள்ளன. இதில் நவீன கால புதினங்கள் பலவும் பழமையை பறை சாற்றுவதில் தேர்ச்சி பெற்று விளங்குகின்றன. இவ்வாறாக பழமை என்றாலும் கசப்பான உண்மைகள் என்ற வகையில் பட்டத்துயானை முன் காலனிய கால முரண்களை மட்டும் எடுத்துரைக்கும் வகையில் ஐரோப்பிய ஆங்கிலேயர்களின் காலனிய ஆதிக்கங்களையும் , தாக்கங்களையும் எவ்வாறு வெளிப்படுத்துகின்றது என்பதையும் தற்கால இலக்கியங்களின் வாழ்வியல் சிந்தனையையும் ஆய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக் ;கமாக விளங்குகின்றன. காலனிய ஆய்வினை தொடந்து முரண்களுக்கு முடிவினைத்தரும் முற்போக்கான மனிதர்களும் அவர்களின் சமூகச்செயற்பாடுகளும் தீர்வுகளாக அமைந்து ஆய்வினை செம்மை சேர்க்கின்றன.

**முன்னுரை:**

கற்காலம் தொடங்கி இந்தியாவின் தென்பகுதியில் தமிழக மக்கள் அதிகளவில் வாழ்ந்து வந்துள்ளனர். இதில் சென்னை மாகாணங்களை மூவேந்தர்கள் , பல்லவர், களப்பிரர் ஆண்டுவந்துள்ளனர். 17ம் நூற்றாண்டிற்கு பிறகு ஐரோப்பியர்கள் வாணிபம் செய்ய வரும்பொழுது பின்பற்றிய கொள்கை காலனியாதிக்கமாக கருதப்படுகின்றது. இத்தகைய காலனிய குடியேற்றத்தால் பாதிக்கப்பட்ட தம் மண்ணை மீட்க முடியாத நிலையில் தன் சொந்த மக்கள்பட்ட துயரத்தையும் , அனுபவித்த காலனிய வாழ்வையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றன.

**காலனிய ஏகாதிபத்திய காலம்:**

கி.பி 1890ஆம் ஆண்டு முதல் கி.பி 1947ஆம் ஆண்டு வரையில் ஐரோப்பிய நாடுகள் பின்பற்றிய கொள்கையே காலனி ஆதிக்கமாக எடுத்துக் கொள்ளப்படுகின்றது. இக்காலனிய ஆதிக்கத்தில் இங்கிலாந்து, பிரான்சு, போர்ச்சுக்கல், ஆப்பிரிக்கா போன்ற கண்டங்களில் உள்ள மக்கள் தங்கள் குடியேற்றத்தை ஆசியா , அமெரிக்க கண்டங்களில் ஏற்படுத்தின. மேலும் இந்நாடுகள் தங்கள்

ஆதிக்கங்களை இவ்விரு கண்டங்களிலும் செலுத்த முயற்சித்த காலமே ஐரோப்பியர்களின் காலனிய காலமாக வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்காலங்கள் கி.பி 1870 முதல் கி.பி 1947 வரை பின்பற்றப்பட்டு புதிய ஏகாதிபத்திய கொள்கையாக பரவுகின்றது.

**"ஏகாதிபத்தியம் என்பது ஒரு நாடு மற்றநனாடுகளின் பகுதிகளை வலுக்கட்டாயமாக வெற்றி கொண்டு தனக்கு அடிபணியுமாறு கொண்டு வரப்படுகின்றன[1]"**

இத்தகைய காலனிய குடியேற்றங்களால் பாதிக்கப்பட்டு துன்பத்தையும் , அனுபவத்தையும் விளக்குவதே நோக்கமாக விளங்குகிறது.

**காலனிய எல்லைகள்:**

கற்காலத்தில் இருந்து இந்தியாவின் தென்பகுதியில் தமிழக மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். அதில் சென்னை மகாணப் பகுதிகளை முற்காலத்தில் சேரர் , சோழர், பாண்டியர், பல்லவர், களப்பிரர் போன்;ற பல அரச வம்சங்கள் ஆண்டு வந்ததாக காலனிய இறுதிநாட்கள் என்ற நூல் எடுத்தியம்புகின்றது. 17ம் நூற்றாண்டில் தொடக்கத்தில் ஐரோப்பியர்கள் வாணிபம் செய்வதற்காக இந்தியத் துணைகண்டத்தின் தெற்குப்பகுதியில் , தனது செங்கோல் ஆட்சியை புகுத்தியதாகக் உரிமைப்போராளி நூல் கூறுகின்றது. இக்காலனிய இடங்களும் , கண்டங்களும் ஆய்வின் எல்லைகளாக பகுத்துள்ளன. மேலும் இக்காலனிய ஆட்சி அனைத்தையும் விவரித்து வெளிப்படுத்துவதே கருதுகோளாக இடம்பெறுகின்றன. மேலும் பொதுவான காலனிய ஆதிக்கத்தை அடுத்து முன்காலனிய பயணத்திற்கு ஆய்வுகள் பயணிக்கின்றது.

**முன் காலனியம்:**

1757 முதல் 1947 வரையிலான ஆதிக்க காலங்கள் முன் காலனியமாக எடுத்தாளப்படுகின்றது.

**"முன் காலனிய ஆதிக்கத்திற்குச் சென்னை மகாணம் தலைமையிடமாகத் திகழ்வதாக ஆங்கிலேயர் ஆதிக்க எதிர்பு வரலாறு நூல் விளக்கம் தருகின்றது[2]"**

மேலும் மதுரை மாவட்டம் தென்னகத்தில் ஆங்கிலேயர்களின் அடுத்த அடிமைக்களமாகத் திகழந்ததாகக் கூறப்படுகின்றன.

மதுரை மாவட்ட ஆங்கில அதிகாரிகளின் கட்டுபாட்டின்கீழ் இராமநாடு , நெல்லை, தூத்துக்குடி போன்ற இடங்கள் அடிகோலின. இவ்விடங்கள் அனைத்திலும் கள்ளர் , மறவர் இனம் அதிகமாக வாழ்ந்து இவர்கள் தன்னாதிக்கம் செலுத்தி ஆங்கிலேயர்களை எதிர்க்கும் திறனைபெற்றதையும் முற்போக்கான சிந்தனை கருத்துக்களை எடுத்துரைக்கும் மனிதர்களையும் இனம்காணுவதே இக்கட்டுரையின் தீர்வுகளாக அமைகின்றன.

**சுயராஜ்ஜியம்:**

காங்கிரஸில் இருந்து பிரிந்த ஒரு பிரிவே சுயராஜ்ஜியமாக விளங்குகின்றது. சுயராஜ்ஜியம் கிடைக்க போராடும் மனிதர்களையும் , காலனிய கொடுங்கோலையும் பட்டத்துயானை நாவல் மனிதர்களின் மூலம் ஆய்வு செய்யப்படும் சமூகவியல் பார்வையே இக்கட்டுரையின் அணுகுமுறையாக செயல்படுகின்றது.

இதன **"மேனியல் வருணம் படர்ந்தால்**
**அது தேமல் சமூக மேனியல் நால்வகை**
**வருணம் படர நாம் விடலாமா?"[3]**

என்ற வரிகள் சாதி பேதமற்ற சமூகத்தை எதிர்பார்க்கும் கவிகளாக பொன்மணி வைரமுத்து கூறியுள்ளார்.

இக்கவிக்கு மாறாக பட்டுத்துயானையில் ரணசிங்கம் போராளியாக ஆங்கிலேயரிடம் இருந்து தனுஷ்கோடி துறைமுகத்தில் கலகம் செய்து போராடுகிறான். இதனை விளக்குவதாக,

**"தனுஷ்கோடி கடலில் நங்கூரம் பாய்ச்சி நின்ற பிரிட்டிஷ் கப்பல் ஒன்று, ரணசிங்கம் வைத்த குண்டில் வெடித்துச் சிதறிக் கொண்டிருக்கிறதாம் பிரபு"[4]**

என்ற பிரிட்டிஷ் போலிஸ் அதிகாரி லாரன்சிடம் நிகழ்த்திய உரையாடலை சுயராஜ்ஜிய ஆதிக்கத்தை எதிர்க்கும் போராளியாக ரணசிங்கம் விளங்குவதாக எடுத்தாளப்படுகின்றது.

**சிப்பாய்களின் அச்சுறுத்தல்:**

பிரிட்டிஷ் ராஜ்ஜியத்தில் பெருநாழியை தகர்க்கும் நோக்கில் சிப்பாய்கள் இராமநாதபுரத்திற்கு வரவழைக்கப்பட்டனர். சிப்பாய்கள் ஆப்பநாடுகளில் சீற்றம் கொள்ளும் போதும் , அச்சுறுத்தும் போதும் காலனியம் முடிவுக்கு வரும் நிலையில் தாக்குதல்கள் ஏற்படுகின்றன. இதனை,

**"எந்த ஒரு சிப்பாயும் உண்மையில் போரில்<br>உயிர் பிழைப்பதில்லை"[5]**

என்ற ஆடி மர்பி அறிஞரின் கருத்துக்கேற்ப பிரிட்டிஷாரின் சிப்பாய்கள் , அனைவரும் பெருநாழிக்கு இரையாகிப் போவதைப் பற்றி சற்றும் கவலையில்லா மனிதர்களாக இருக்கின்றனர். மேலும் இவர்கள் தனுஷ்கோடி கப்பலை தகர்த்த காரணத்திற்காக ரணசிங்கத்தை தேடி மக்களை மிரட்ட ஊருக்குள் நுழையும் போது,

**"ஆப்பநாட்டுக்காரனுக்கு உசிரு மசிரு மாதிரி. எங்க உடம்பு கூழும் கஞ்சியும் மட்டும் குடிச்சு வளர்ந்த உடம்பு இல்லை. எதிரியோட ரத்தம் குடிச்சு வளர்ந்த உடம்பு! இந்த மண்ணை எங்க தோண்டினாலும் தண்ணி ஊறுதோ இல்லையோ! ரத்தம் ஊறும்"[6]**

என்ற ஆப்பநாட்டு கிழவரின் உரையாடலில் சிப்பாய்களின் ஊடுருவலும் , ஆப்பநாட்டு வீரச்செறிவும் புலப்படுகின்றது.

**பறையான் மடை தாக்கம்:**

இராமநாடு பகுதியில் உள்ள ஒரு சிற்றூர் பகுதி பறையான் மடையில் ரணசிங்கத்தின் படைகள் ஆங்கிலேயரை எதிர்த்தது பற்றிய நிகழ்வினை இத்தாக்கம் விளக்குகிறது. முதுகுளத்தூர் பிரிட்டிஷ்படையும், கிடாத்திருக்கை போராளிகளும் மோதும் நிகழ்வுகள் போராளிகளின் சுதந்திர போராட்டத்தை வெளிப்படுத்துகிறது. 'மோசமான அமைதி போரை விட மோசமானது' என்ற அறிஞர் பர்சிடஸின் மொழிகளுக்கு இணங்க ரணசிங்கத்திற்கு வலைவிரிக்கப்பட்டது. ஆனால் அவை நிறவேறாமல் போய்விட்டது. மாறாக,

**"கிடாத்திருக்கை ஆளுகள் தப்பிச்சுட்டாங்க போலிஸ் எல்லாம் செத்துப்போயிட்டாங்க எசமான்"[7]**

என்ற வரிகளின் மூலம் ரணசிங்கத்தின் பறையான்மடை அணிவெற்றி பெற்றதை விளக்குகின்றது.

**ஆயுதப்பயிற்சியும், புரட்சியும்:**

ஆயுதப்பயிற்சியை புரட்சிக்கு வித்தாகக் கொண்டு போராளிகள் புரட்சியை துவக்கினர். எத்தனை கோடி இன்பம் வைத்தாய் எங்கள் இறவா என்ற பாரதியின் இன்பம் வாய்க்கப்பெற்ற இப்பூமியில் மனிதனாய் பிறந்தவர்கள் அத்தனை இன்பங்களையும் அனுபவிக்காமல் ஆதிக்க உணர்வினால், பிறரை அடிமைப்படுத்தி ஆள வேண்டும் என்ற கீழ்மைக்குணத்தால் உலகப்போர்கள்

மூளுகின்றன.

இம்மாதிரியான போர்களும் ஆயுதங்களின் உபயோகமும் கொண்ட நிகழ்வுகள் முன்காலனிய பதிவுகளை முன்வைக்கும் பட்டத்துயானை நாவலின் மூலம் வரலாற்று உண்மைகளை உணரமுடிகின்றது. மேலும் பெருநாழி ரணசிங்கம் பள்ளிபருத்திலே ஆங்கில அரசால் புறந்தள்ளப்பட்டு, 'இந்திய வேசிப்பயலே' என்று பிரிட்டிஷ் பள்ளியில் இருந் ;து நீக்கப்பட்டு வங்கதேசம் சென்று இராணுவப்பயிற்சியை மேற்கொண்டான். இதன்மூலம் வெடிகுண்டு தயாரித்தல் , கொரில்லா பயிற்சியை கற்று சிட்டாங் எனும் ஆயுதங்கிடங்கை கைபற்றும் அளவிற்கு புரட்சி தளபதியாக உருவெடுப்பதையும். காலனியத்தை முறியடிக்கும் போராளி இனத்தையும் பதிவுசெய்யப்படுகின்றது. இதனை,

**"மரணத்திற்கு இங்குயாரும் வருந்துவதில்லை உயிர்கள்**
**இங்கே இலையுதிர்காலத்து இலைகளாயின[8]**

என்ற வைரமுத்துவின் வரிகளுக்கு இணங்க போராளிகளின் போராட்ட நிகழ்வுகள் முன்வைக்கப்படுகின்றன.

**கருஞ்சேனை படைப்போர்:**

கருஞ்சேனை படை என்பது இத்தாலியின் பாசிச இராணுவ அமைப்பாகும். உலகப்போர்களின் போது இப்படைகளின் சேவை அளப்பரியதாகும். இராமநாடு மாவட்டத்தில் உள்ள கமுதியில் ரணசிங்கத்தின் கருங்சேனை படைகள் தொடுக்கும் போர்களை இப்பகுதிகள் விளக்குகின்றன. ஆப்பநாட்டு இளவட்டங்கள் மூன்று அணிகளாக பிரிந்து வறுமை வாட்டிய போதிலும் 'பசியிலே சாகிறவன் படையிலே சாகட்டும்' என்ற நோக்கில் கமுதி கருஞ்சேனை படையெடுத்தன. இதனை,

**"தலையாகிய அறமே புரி**
**சரிந்தி யுதவுவாய்!**
**சமமே பொருள் ஜனநாயகம்**
**எனவே முரசறைவாய்"[9]**

என்ற பாரதிதாசனின் கவிகளுக்கு இணங்க கமுதி சேனைகள் வீரமுழக்கமிட்டு படையெடுத்தனர். இதனை விளக்கும் நாவலின் வரிகள்

**"எங்க அப்பன் ஒரு அடிமைப்புத்திக்காரன் எனக்கு சீமைச்சாமின்னு பேரு வச்சு வெள்ளைக்காரனுக்கு மரியாதை பண்ணியிருக்கான்! அந்தப்பாவத்தை கழுவனும்னா நான் நாலு சீமைக்காரனைக் கொல்லனும்"[10]** என்ற நாவலின் வரிகள் கமுதி மக்களின் அடிமைத்தனத்தையும் , கோர்த்துக்கட்டிக் கொண்ட ஆயுதங்களை சுமந்த படை வீரத்தையும் குறிப்பிடுகின்றது.

**குண்டாற்றப்போர்:**

இன்றைய காலச்சூழலில் சமத்துவம் என்பது சமுதாயத்தில் மூழ்கடிக்கப்பட்ட ஒன்றாக மாறிவிட்டது. சமத்துவமின்றி போர்களும் , கலவரங்களுமே கலாச்சார அடையாளமாகத் திகழ்கின்றன. இம்மாதிரியான போர்களும் மதக்கலவர தாக்குதலும் கமுதி பகுதியெங்கும் பற்றி எரிவதையே இப்பகுதி விளக்குகிறது.

ஆங்கிலேயரின் படைகள் கமுதியை அடுத்து குண்டாற்றுப் பகுதிக்குள் நுழைந்தது. வெள்ளையர்களின் துப்பாக்கி குண்டுகளும், ரணசிங்கத்தின் படைகளும் நெருங்க ஆரம்பித்தன. இதன் விளைவாய் கமுதிக்கோட்டை தகர்க்கப்பட்டது.

இதனை,

**“ஜிங்கால் பீரங்கிகளால் கோட்டையைத் தகர்த்தெறியுங்கள். பீரங்கிப் படையைத் தவிரமற்றவீரர்கள் சுற்றிலும் கண் வைத்திருங்கள்”[11]**

என்ற வரிகள் கமுதிக்கோட்டையை தகர்த்ததோடு போராளி சீமைச்சாமியின் படைகள் , இளவட்டங்கள் அனைத்தும் சுட்டுத்தள்ளப்பட்டதையும் விளக்குகின்றன. மேலும் நூற்றுநாற்பது வருடமாக தாகம் கொண்ட கமுதி கோட்டையும் , குண்டாறும் மடக், மடக்கென்று குருதியை குடிக்கும் அளவிற்கு யுத்தவெளியும், காலனியமும் எல்லைகளாக பதிவுசெய்யப்படுகின்றது.

**வீரமரணம்:**

சுதந்திரம் பெற்றதால் விளைந்த நன்மைகள் என்பது நம்நாட்டில் சிறிதளவும் இல்லாமல் போனது அந்நியனுக்கு அடிமைப்பட்டுக்கிடந்தே காலம் நகர்கின்றது. ‘அப்பனின் திருவோட்டை புத்திரனுக்குப் புதுபித்துக் கொடுத்தது போல’ வெள்ளையரிடம் அடிமைப்பட்டு சொந்த நாட்டவரிடமே பிணைக்கைதிகளாக இருப்பதனை,

**“வெளிநாட்டான் இட்ட விலங்கை உருக்கி**
**உள்ளூர் விலங்குகள் உற்பத்தி செய்தது”[12]**

என்ற வரிகள் விலங்குகளுக்குள் எப்போதும் என்றுமே மாற்றமில்லை என்ற கருத்தினை வகுக்கின்றது. இம்மாதிரியாக பிணைக்கைதிகளாக போராளி ரணசிங்கத்தையும் தமிழின மக்களையும் அந்தமான் காடுகளில் வைத்து கொலைசெய்யப்பட்ட ஏகாதிபத்திய பகுதியே இறுதியாக விளங்குகிறது.

இவ்வாறாக குண்டாற்றுத்தாக்குதலை தொடர்ந்து ரணசிங்கம் பிரிட்டிஷாரின் சதி திட்டத்தில் கொல்லப்பட்டு பெருநாழி உள்ளிட்ட சேதுப்பகுதி அனைத்தும் ஆங்கில ஏகாதிபத்திய அடிமைகளாக உருவாகும் நிலைக்குத் தள்ளப்பட்டதாக கூறப்படுகின்றன. ரணசிங்கத்தின் வீரமரணமே விடுதலையின் இறுதிகட்ட யுத்தமாக விளங்கி முன்காலனிய காலத்தை முடிவுக்கு கொண்டுவந்தது.

**“ரணசிங்கத்தை வஞ்சகமான முறையில் யாரோ கொலை செய்துவிட்டதாக சர்க்கார் விரோதிகள் சிலர் புரளி கிளப்புகிறார்கள். வதந்திகளை நம்ப வேண்டாம்”[13]**

என்ற நாவலின் வரிகள் ரணசிங்கத்தின் மரணத்தை இயற்கை மரணமாக அறிவிக்கும்படி தண்டோரா அறிவிப்பானுக்கு விதித்த கட்டளையும் மக்களின் காலனிய வாழ்வின் தொடக்கமும் பதிவிடப்படுகின்றன.

**தொகுப்புரை:**

நவீனகால இலக்கியச்சூழல்களில் காலனிய ஆதிக்க பதிவுகளைப் பல புதினங்கள் உணர்த்தியிருந்தாலும் கரிசல் வட்டார நாவலில் மண்வாசனையுடன் வாழப்போராடும் மனிதர்களின் காலனிய போராட்ட வெளிகளும் அதன் விளைவுகளும் பட்டத்துயானை நாவலில் உயிர்தெழும் வரிகளையும் நிகழ்வுகளையும் கொண்டுள்ளது , மேலும் முன்காலனிய ஆதிக்கங்களை மையமாகக் கொண்டு ஆப்பநாட்டு மக்களின் துயரங்களையும் , போர்த்திறத்தையும் நேர்த்தியுடன் ஆசிரியர் வேலராமமூர்த்தி பகிர் ;ந்துள்ளார். கி.மு முதல் கி.பி வரையுள்ள சுதந்திர போராட்ட நிகழ்வுகளின் வண்ணமாக பிரதிபலிப்பை எடுத்துரைக்கும் போராட்ட வீரர்களின் நிகழ்வுகளும் இந்நாவலில் மையப்படுத்தப்படுகின்றன. ஆப்பநாட்டு சேனைகளின் தாக்குதல்களும் விளைவுகளுமே தீர்வுகளுக்கு வித்திடுகின்றன.

**முடிவுரை:**

விடுதலைக்கவி பாரதிதாசனின் ஆலைகளும் , கல்விச்சாலைகளும் வைப்போம் என்ற வாக்கிற்கு இணங்க மக்களுக்கு சிறந்த கல்வியை அளிப்பதன் மூலம் அடிமையை விட்டு வெளியேற வழிகடைப்பதாக ஆய்வுகள் வினவுகின்றன. மேலும் ஒவ்வொரு தனிமனிதனின் விடுதலையும் தேசத்து விடுதலையாகின்றது. அடிமைதேச பிரஜைகளில் இருந்து விடுபட ஒவ்வொருவரும் ரணசிங்கமாக மாறும் நாளிலே காலனியத்தை ஒழிக்க முடியுமென்பதே வாழ்வியல் சிந்தனைகள் ஏற்படுத்திய தீர்வாக அமைகின்றது.

**அடிக்குறிப்புகள்:**

1. ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு வரலாறு , சிலம்புச்செல்வர் ம.பொ.சிவஞானம் , ப.எண் - 69, கங்காராணி பதிப்பகம், முதற்பதிப்பு – 2011, தொல்காப்பியர் தெரு, பொழிச்சலூர், சென்னை.
2. மேலது, ப.எண் - 132.
3. வைரமுத்து, பொன்மணிவைரமுத்து கவிதைகளில் சமுதாயப்பார்வை , முனைவர்.மோ.ஜ.மகேஸ்வரி, ப.எண் - 34, வசந்தா பதிப்பகம், முதற்பதிப்பு – 2019, 26, குறுக்குத்தெரு ஜோசப் காலனி, ஆதம்பாக்கம், சென்னை – 600 088.
4. பட்டத்துயானை, வேலராமமூர்த்தி, ப.எண் - 14, டிஸ்கவரி புக்பேலஸ், முதற்பதிப்பு – 2015, கே.கே.நகர்(மேற்கு, சென்னை.
5. எழுத்து இணையவழி, பத்திரிக்கை, ப.எண் - 3.
6. பட்டத்துயானை, வேலராமமூர்த்தி, ப.எண் - 17, டிஸ்கவரி புக்பேலஸ், முதற்பதிப்பு – 2015, கே.கே.நகர்(மேற்கு, சென்னை.
7. எழுத்து இணையவழி, பத்திரிக்கை, ப.எண் - 7.
8. வைரமுத்து, பொன்மணிவைரமுத்து கவிதைகளில் சமுதாயப்பார்வை , முனைவர்.மோ.ஜ.மகேஸ்வரி, ப.எண் - 77, வசந்தா பதிப்பகம், முதற்பதிப்பு – 2019, 26, குறுக்குத்தெரு ஜோசப் காலனி, ஆதம்பாக்கம், சென்னை – 600 088.
9. பாரதிதாசன் கவிதைகள் , ப.எண் - 110, மாணிக்கவாசகர் பதிப்பகம் , 31, சிங்கர்தெரு, பாரிமுனை, சென்னை, முதற்பதிப்பு – 1999.
10. பட்டத்துயானை, வேலராமமூர்த்தி, ப.எண் - 213, டிஸ்கவரி புக்பேலஸ், முதற்பதிப்பு – 2015, கே.கே.நகர்(மேற்கு, சென்னை.
11. மேலது, ப.எண் - 312.
12. வைரமுத்து, பொன்மணிவைரமுத்து கவிதைகளில் சமுதாயப்பார்வை , முனைவர்.மோ.ஜ.மகேஸ்வரி, ப.எண் - 43, வசந்தா பதிப்பகம், முதற்பதிப்பு – 2019, 26, குறுக்குத்தெரு ஜோசப் காலனி, ஆதம்பாக்கம், சென்னை – 600 088.
13. பட்டத்துயானை, வேலராமமூர்த்தி, ப.எண் - 372, டிஸ்கவரி புக்பேலஸ், முதற்பதிப்பு – 2015, கே.கே.நகர்(மேற்கு, சென்னை.